**முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 15 ம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 335/2025</u>**

**CNR No. TNTL06-000444-2025**

1. தமிழரசி
2. சன்ஷிகா (மைனர்)
3. பூரண சரஸ்வதி

(2, 3 ம் வாதிகள் அவருடைய
தாயார் 1 ம் வாதி மூலம்) ... வாதிகள்

//எதிர்//

1. தமிழக அரசுக்காக
   அதன் மாவட்ட ஆட்சித்தலைவர்,
   திருநெல்வேலி.
2. தாசில்தார் அவர்கள்,
   பாளையங்கோட்டை.
   பாளையங்கோட்டை தாலுகா. ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது கடந்த 16.09.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றம் முன்பு 10.07.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C. நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.ரிபாய் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்த வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## தீர்ப்புரை

இவ்வழக்கானது, வாதிகள் இறந்துபோன சங்கரராம் ஜெகதீசன் என்பவரின் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்யக் கோரி வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வழக்குரையின் சுருக்கம்:-**

2.1) சங்கரராம் ஜெகதீசன் மற்றும் வேணி என்பவருக்கும் முதலில் கடந்த 26.01.2000 ம் தேதி திருமணம் நடைபெற்றது என்றும், பின்னர் மாண்புமிகு முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் திருநெல்வேலி HMOP No. 87/2001 ல் கடந்த 11.09.2003 ம் தேதி விவாகரத்து மனு அனுமதிக்கப்பட்டது என கூறப்பட்டள்ளது. மேலும் 1 ம் வாதியும், மகேஷ் என்பவருக்கும் கடந்த 10.11.2008 ம் தேதி நடந்த திருமணமானது 09.01.2011 ம் தேதி விவாகரத்து யாதஸ்து மூலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என கூறப்பட்டள்ளது.

2.2) 1 ம் வாதி மற்றும் சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும் கடந்த 03.06.2013 ம் தேதி திருமணம் நடைபெற்றது என்றும் மேற்படி திருமணத்தின் பயனாக 2, 3 வாதிகள் பிறந்தார்கள் என்றும் மேற்படி சங்கரராம் ஜெகதீசன் என்பவர் கடந்த 01.04.2025 ம் தேதி உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றும் வாதிகளை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை என கூறப்பட்டுள்ளது.

3) **2 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1 ம் பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்:-**

3.1) இவ்வழக்கானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கக்கூடியதல்ல என்றும், தமிழக அரசின் முதன்மை செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வருவாய் நிர்வாக பிரிவு, சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.9633/RA-3(2)/2022-4 நாள்.28.09.2022-ன்

படி வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்த மனுவானது நிராகரிக்கப்பட்டால், பாதிக்கப்பட்ட நபர் உரிய அதிகாரியிடம் மேல்முறையீடு செய்ய வேண்டுமென்றும், மாறாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும், எனவே, இவ்வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே, செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

4) **<u>வாதிகளின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் விசாரணைக்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன:-</u>**

1. Whether the court has jurisdiction to try this case?
2. Whether the plaintiff is entitled for declaration as prayed for?
3. Whether the plaintiff is entitled for Mandatory injunction as prayed for?
4. To what other relief the plaintiff is entitled?

5) வாதிகள் தரப்பில், 1ம் வாதி திருமதி. தமிழரசி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 3ம் தரப்பினர் திருமதி. ஆண்டாள் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். திருமதி. ஜெயராணி பாளையங்கோட்டை பகுதி-2 கிராம நிர்வாக அலுவலர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>எழுவினா 1 க்கான தீர்வு :-</u>**

7) வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கை இந்நீதிமன்றம் நடத்துவதற்கு அதிகார வரம்பு உள்ளது என்று

வாதிட்டார். பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில், இந்த வழக்கை இந்நீதிமன்றம் நடத்துவதற்கு அதிகார வரம்பு இல்லையென வாதிட்டார்.

8) பிரதிவாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டி வாதிடப்பட்ட அரசாணையை பரிசீலனை செய்கையில், பிரதிவாதிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்ட அரசாணையில் வட்டாட்சியர் வாரிசு சான்றிதழ் வழங்கினாலோ அல்லது நிராகரித்தாலோ மேல்முறையீடு செய்வதற்கான வழிமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் கூட மேற்படி அரசாணையில் இறந்த நபரின் வாரிசுகள் யார் யார் என விளம்புகை செய்வது தொடர்பான உரிமையியல் வழக்கை விசாரிக்க உரிமையியல் நீதிமன்றத்திற்கு எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை. மேலும் வாதிகள் தங்களுடைய சட்டமுறையான நிலையை (legal character) விளம்புகை செய்யக்கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் குறித்தவகை நிவாரண சட்டம் பிரிவு 34 ன் படி இந்த வழக்கினை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை உள்ளது. மேலும், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 9ன் அடிப்படையிலும் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரையரை உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எழுவினா 1 வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

<u>எழுவினா 2–க்கான தீர்வு :–</u>

9) 1ம் வாதி/வா.சா.1 தனது சாட்சியத்தில் சங்கரராம் ஜெகதீசன் மற்றும் வேணி என்பவருக்கும் முதலில் கடந்த 26.01.2000ம் தேதி திருமணம் நடைபெற்றது என்றும், பின்னர் மாண்புமிகு முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் திருநெல்வேலி HMOP No. 87/2001 ல் கடந்த 11.09.2003 ம் தேதி விவாகரத்து மனு அனுமதிக்கப்பட்டது என்றும் மேலும் அவருக்கும் மகேஷ் என்பவருக்கும் கடந்த 10.11.2008 ம் தேதி நடந்த திருமணமானது 09.01.2011 ம்

தேதி விவாகரத்து யாதஸ்து மூலம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என வழக்குரையில் உள்ள சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

10) 1ம் வாதி/வா.சா.1 மேலும் தனது சாட்சியத்தில் தனக்கும், சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும் கடந்த 03.06.2013ம் தேதி திருமணம் நடைபெற்றது என்றும் மேற்படி திருமணத்தின் பயனாக 2, 3 வாதிகள் பிறந்தார்கள் என்றும் மேற்படி சங்கரராம் ஜெகதீசன் என்பவர் கடந்த 01.04.2025 ம் தேதி உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றும் வாதிகளை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்றும் வழக்குரையில் உள்ள சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் வெறுமனே எதிர்வழக்குரையில் வாதிகள் தரப்பில் கூறப்பட்டள்ள சங்கதிகளை மறுத்துள்ளனர்.

11) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில் சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும், வேணி என்பவருக்கும் விவாகரத்து HMOP No. 87/2001 ல் கடந்த 11.09.2003 ம் தேதி மாண்புமிகு 1வது கூடுதல் சார்பு நீதிமன்றம் திருநெல்வேலியில் வழங்கப்பட்டுள்ளது என்பதை வா.சா.ஆ.8 ஐ பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது. 1ம் வாதிக்கும், மகேஷ் என்பவருக்கும் நடந்த திருமணமானது விவாகரத்து பத்திரம்/ வா.சா.ஆ.10 மூலம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்கையில் 1ம் வாதி மற்றும் சங்கரராம் ஜெகதீசன் ஆகிய இருவருக்கும் நடைபெற்ற முதல் திருமணமானது ரத்து செய்யப்பட்டுள்ளது என வாதிகள் வழக்குரையில் கூறிய சங்கதிகளை உரிய சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

12) சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும், 1ம் வாதிக்கும் கடந்த 03.06.2013ம் தேதி வள்ளியூரில் உள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் நடைபெற்றுள்ளது என்பதை நிரூபிக்கும் வகையில்

வா.சா.ஆ.4 வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.2 தனது சாட்சியத்தில் அவர் தான் 1ம் வாதிக்கும் சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும் திருமணம் நடத்தி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்கையில் 1ம் வாதிக்கும், சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது என்பது வாதிகள் தரப்பில் உரிய சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

13) 1ம் வாதிக்கும், சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும் 2ம் வாதி கடந்த 14.06.2014ம் தேதி பிறந்துள்ளார் என்பதை வா.சா.ஆ.5 ஆன பிறப்பு சான்றிதழ் பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது. 1ம் வாதிக்கும், சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும் 3ம் வாதி கடந்த 22.12.2015ம் தேதி பிறந்துள்ளார் என்பதை வா.சா.ஆ.6 ஆன பிறப்பு சான்றிதழ் பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது. மேற்படி சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் 2, 3 வாதிகள், 1ம் வாதிக்கும், சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும் பிறந்துள்ளார்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

14) வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆன 2, 3 வாதிகளின் ஆதார் அட்டையை பார்வையிடுகையில் தந்தை பெயர் என்ற காலத்தில் சங்கரராம் ஜெகதீசன் என்பவர் பெயர் உள்ளது. எனவே 2, 3 வாதிகள் சங்கரராம் ஜெகதீசன் என்பவரின் குழந்தைகள் என்பது உறுதியூட்டப்பட்டுள்ளது.

15) சங்கரராம் ஜெகதீசன் என்பவர் கடந்த 01.04.2025ம் தேதி இறந்துவிட்டார் என சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஆன இறப்பு சான்றிதழை பரிசீலனை செய்கையில் மேற்படி தேதியில் சங்கரராம் ஜெகதீசன் என்பவர் இறந்துவிட்டார் என்பதை அறிய முடிகிறது. பிரதிவாதிகள் தரப்பில் சங்கரராம் ஜெகதீசன் என்பவர் இறந்ததை மறுக்கவில்லை. மேற்படி சங்கதிகளை பரிசீலனை செய்கையில் வாதிகள் தரப்பில் சங்கரராம் ஜெகதீசன்

என்பவர் இறந்துவிட்டார் என்பதை உரிய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

16) 1ம் வாதி வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்துள்ள மனுவை 2ம் பிரதிவாதி தள்ளுபடி செய்துள்ளார் என்பதை வா.சா.ஆ.9 ஐ பார்வையிடுகையில் அறிய முடிகிறது. எந்த ஆவணங்களின் அடிப்படையில் வாரிசு சான்றிதழ் வழங்காமல் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை குறிப்பிட்டு பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கவில்லை.

17) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில் 1ம் வாதிக்கும், சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கும் நடைபெற்ற திருமணத்தின் பயனாக 2, 3 வாதிகள் பிறந்துள்ளார்கள் என்பதும் அதன் பின்னர் மேற்படி சங்கரராம் ஜெகதீசன் என்பவர் இறந்துவிட்டார் என்பதும் மேலும் வாதிகளை தவிர வேறு எந்த வாரிசுகளும் தற்போது மேற்படி சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கு வாரிசுகள் இல்லை என்பதும் வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே வாதிகள் சங்கரராம் ஜெகதீசன் என்பவரின் வாரிசுகள் என எழுவினா 2 வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்படுகிறது.

**<u>எழுவினா 3–க்கான தீர்வு :–</u>**

18) 1ம் வாதி வாரிசு சான்றிதழ் கோரி தாக்கல் செய்த மனுவை 2ம் பிரதிவாதி இறந்துபோன நபருக்கு இரண்டு மனைவிகள் என்றும் இரண்டாவது மனைவிக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது எனக் கூறி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை வா.சா.ஆ.9 ஐ பார்வையிடுகையில் அறிய முடிகிறது. 2ம் பிரதிவாதி 1ம் வாதியிடம் உரிய ஆவணங்களை பெற்று அதனை பரிசீலனை செய்து வாரிசு சான்றிதழ் வழங்கியிருக்கலாம், இருந்தபோதிலும் மேற்படி செயலை 2ம் பிரதிவாதி செய்யவில்லை என்பதை வா.சா.ஆ.9 ஐ பார்வையிடுகையில் அறிய முடிகிறது.

19) மேலும் 2ம் பிரதிவாதி எந்த ஆவணங்களின் அடிப்படையில் வாரிசு சான்றிதழ் வழங்க இயலாது என 1ம் வாதியின் மனுவை நிராகரித்தார் என்பதற்கு எந்த விளக்கத்தையும் வா.சா.ஆ.9 ல் குறிப்பிடவில்லை. வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அறிக்கையின் படி தள்ளுபடி செய்ததாக வா.சா.ஆ.9 ல் கூறப்பட்டுள்ளது. மேற்படி வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் எந்த ஆவணங்களின் அடிப்படையில் 2ம் பிரதிவாதியிடம் அறிக்கை சமர்ப்பித்தார்கள் என்பதை பிரதிவாதிகள் தரப்பில் தங்கள் எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை.

20) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில் உரிய ஆவணங்களை வாதிகளிடம் பெற்று பரிசீலனை செய்யாமல் 1ம் வாதி தாக்கல் செய்த மனுவை 2ம் பிரதிவாதி நிராகரித்துள்ளார். எனவே வாதிகள் தான் இறந்துபோன சங்கரராம் ஜெகதீசன் என்பவரின் வாரிசுகள் என சான்றிதழ் 2ம் பிரதிவாதி வழங்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு வழங்கி உத்தரவிடப்படுகிறது. எழுவினா 3 வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்படுகிறது.

<u>எழுவினா 4 க்கான தீர்வு</u>

இவ்வழக்கில் தரப்பினர்களுக்கிடையே எடுக்கப்பட்டுள்ள கட்சி, மற்றும் மேலே தீர்மானிக்கப்பட்டுள்ள எழுவினா 1 முதல் 3 ஐ கருத்தில் கொண்டு இவ்வழக்கின் தரப்பினர்களுக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று மேற்கண்ட எழுவினாவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**இறுதியாக, இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**1) காலம் சென்ற சங்கரராம் ஜெகதீசன் என்பவருக்கு வாதிகள் மட்டும் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் வழங்கி**

**தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**2) 2ம் பிரதிவாதி வாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் வழங்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**3) வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு அவரவர் செலவு தொகையை அவரவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.**

**4) செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜுலை மாதம் 15ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Judgment Uploaded on 15.07.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.15 17:03:02 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

**<u>1) வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 – திருமதி. தமிழரசி (1ம் வாதி)

வா.சா.2 – திருமதி. ஆண்டாள் (3ம் தரப்பினர்)

வா.சா.3 – திருமதி. ஜெயராணி (பாளையங்கோட்டை பகுதி–2 கிராம நிர்வாக அலுவலர்)

**<u>2) வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> –**

| **வ.எண்.** | **ஆவணங்கள்** | **அசல் / நகல்** |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் | நகல் |

| | | |
|---|---|---|
| | (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது) | |
| வா.சா.ஆ.2 | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.3 | 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.4 | திருமண கட்டண இரசீது | அசல் |
| வா.சா.ஆ.5 | 2ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் | கணினி பதிவறிக்க நகல் |
| வா.சா.ஆ.6 | 3ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது) | நகல் |
| வா.சா.ஆ.7 | சங்கரராம் ஜெகதீசன் என்பவரின் இறப்பு சான்றிதழ் | கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.8 | HMOP No.87/2001 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு | உண்மை நகல் |
| வா.சா.ஆ.9 | 2ம் பிரதிவாதி வழங்கிய மேலெழுத்து | கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.10 | விவாகரத்து பத்திரம் | அசல் |

**<u>3) பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> : இல்லை**

MARIMUTHU R MUNIYASAMY

Judgment Uploaded on 15.07.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.15 17:02:47 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி
அ.வ.எண்.335/2025
சீரான/ வரைவு தீர்ப்புரை
15.07.2026